R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
March 2021

ஓவியரின்
திறமைக்கு
பாராட்டு







கரூர் கிறிஸ்துவின் சபை

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

## Our TV Program:

*Every Tuesday 6.00 P.M on Tamilan TV*
*Every Thursday 6.00 P.M on Tamilan TV*
*Every Saturday 8.00 P.M on Nambikkai TV*

YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan






THE WORD OF CHRIST

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 21 | மார்ச் 2021 | கனி 4




MONTHLY | THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16



ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

பாடம் : 16


தலைப்பு : பஸ்காவாகிய பலி – Sacrifice of the Feast of Passover

வேத வாசிப்பு : உபாகமம் 16:1-8

1. கர்த்தருடைய பஸ்காவாகிய பலி - யாத்.12:27
2. பஸ்காவை ஆசரிக்கும் முறை - உபா.16:1-8
3. நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து - 1கொ.5:7



தேவன் பெரியவர்
தேவன் நமது அடைக்கலம்
நம்முடைய தேவன் பரிசுத்தர்
நம்முடைய தேவன் மனஉருக்கமானவர்
நம்முடைய தேவன் அதிசயமானவர்



God is great
God is our refuge
Our God is Holy
Our God is merciful
Our God is wonderful

the word of christ இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும் YouTube வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509







**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

"The Churches Of Christ Salute you" Romans 16:16



## வேத அறிவுப் போட்டி எண்: 247

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. தேவன் இல்லை என்று தன் இருதயத்திலே சொல்லிக்கொள்ளுகிறவன் யார்?
2. இயேசுவை நோக்கி: நீர் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தப்போகிற காரணமென்ன என்றவன் யார்?
3. வெவ்வேறான எவ்விரண்டும் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்?
4. என்னைக் காட்டிக் கொடுக்கிறவனுடைய கை என்னுடனேகூடப் பந்தியிலிருக்கிறது என்று யாரைக் குறித்து சொன்னார்?
5. மூடன் எப்படிச் சாகிறானோ அப்படியே எவனும் சாகிறான்?
6. ஸ்தேவானை கொலைசெய்கிறதற்கு எவனும் சம்மதித்திருந்தான்?
7. யாக்கோபு வேர்பற்றி, இஸ்ரவேல் பூத்துக்காய்த்து உலகத்தைப் பலனால் நிரப்பும் நாட்கள் வரும் என்று எந்த தீர்க்கனைக் கொண்டு பேசினார்?
8. உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வதிக்க வேண்டியதேயன்றி என்ன செய்யாதிருங்கள்?
9. தண்ணீர் இல்லாத துரவிலே கயிறுகளினால் இறக்கி விடப்பட்ட தீர்க்கன் யார்?
10. கடையிலே விற்கப்படுகிற எதையும் வாங்கிப் புசிக்கலாமா?

## வேதாகம ஆய்வு... 32 எசேக்கியா - Hezekiah



1. யேகோவாவின் பலம்
2. யூதாவின் 12-ம் ராஜா
3. ஆகாசின் மகன் – 2இரா.16:20
4. வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான் – 2இரா.20:1
5. கண்ணீர் விண்ணப்பத்தை கர்த்தர் கேட்டு 15 வருஷத்தை கூட்டினார் – 2இரா.20:6
6. ஏசாயா வார்த்தைப்படியே ஆகாசுடைய சூரிய கடியாரத்தின்படி 10 பாகை பின்னிட்டது – 2இரா.20:11
7. பாபிலோனின் ராஜா அனுப்பிய நபர்களுக்கு தன் பொக்கிஷ சாலைகள் அனைத்தையும் காண்பித்து இழந்தான் – 2இரா.20:15-17

சிறுவர் பகுதி

## இரண்டுவிசை தரிசனம்

வேத பகுதி: 1இராஜாக்கள் 11:9



**அ**ன்பான தம்பி தங்கைகளே சாலொமோன் ராஜாவை நீங்கள் கேள்விப்பட்டு இருக்கிறீர்களா? அவர்தான் எருசலேமின் தேவாலயத்தைக் கட்டினார். அவர் இந்த ஆலயத்தை 7 வருஷத்தில் கட்டிமுடித்தார். அவர் எருசலேமிலே இஸ்ரவேலையெல்லாம் 40 வருஷம் அரசாண்டார். 13 வருஷத்தில் அரண்மனையையும் கட்டிமுடித்தார். 3000 நீதிமொழிகளையும், 1005 பாட்டுகளையும் எழுதினார். அவருக்கு பிரபுக்கள் குலமான எழுநூறு மனையாட்டிகளும், முந்நூறு மறுமனையாட்டிகளும் இருந்தார்கள்.

ஆனால், சாலொமோன் வயது சென்றபோது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்; அதினால் அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை. சாலொமோன் சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், அம்மோனியரின் அருவருப்பாகிய மில்கோமையும் பின்பற்றினான். சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதைப்போல கர்த்தரைப் பூரணமாய்ப் பின்பற்றாமல், கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

ஆகையால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சாலொமோனுக்கு இரண்டுவிசை தரிசனமாகி, அந்நியதேவர்களைப் பின்பற்றவேண்டாம் என்று கட்டளையிட்டிருந்தும் அவன் கர்த்தரை விட்டுத் தன் இருதயத்தைத் திருப்பி, அவர் கற்பித்ததைக் கைக்கொள்ளாமற்போனதினால், கர்த்தர் அவன்மேல் கோபமானார். அன்பான பிள்ளைகளே, இந்த சாலொமோனை கர்த்தர் இப்படி எச்சரித்திருந்தும் வழிவிலகிபோனான். இவனுக்கு அதிகமான ஞானத்தைக் கொடுத்து, அத்தோடு செல்வத்தையும் கொடுத்திருந்தார். இவனோ ஒன்றுக்கும் உதவாத விக்கிரகத்தை பின் பற்றி சோரம்போனான். நீங்களும் இவனைப்போல போய்விடாதபடி கர்த்தருக்குள் உங்களை பாது காத்துக்கொள்ளுங்கள்.

**மனப்பாட வசனம்**

**“என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்”**

**( யாத்திராகமம் 20:3 )**


‘ தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் ’ மாத இதழை ஒவ்வொரு மாதமும்
10ம் தேதியே Whatsapp மூலம் பெற்றுக்கொள்ள 6379350509
என்ற எண்ணோடு தொடர்பு கொள்ளுங்கள்





# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 21 மார்ச் -2021 கனி - 4


ஆசிரியருரை

## அசுத்தமானதைத் தொடாதிருங்கள்
## Don`t Touch What is Unclean



அசுத்தத்தை யாரும் விரும்பமாட்டார்கள். ஆனால் அசுத்தமான வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருப்பார்கள். இதை நம்முடைய வாழ்க்கையில் அநுதின ஜீவியத்தில் காணலாம். அசுத்தம் என்று சொல்லும்போது பொதுவாக ஜனங்கள் நினைப்பது கழிவுகள் அல்லது துர்நாற்றம் போன்றவைகள். இதுவும் அசுத்தம் தான் ஆனாலும் இதைக்காட்டிலும் அசுத்தமான காரியங்கள் இருக்கிறது அதைக்குறித்து வேதாகமம் என்ன சொல்லுகிறது என்று நாம் தியானிக்கலாம். "நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (2கொரி.6:17). இங்கே பவுல் எவர்கள் நடுவிலிருந்து பிரிந்துபோய் அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்கிறார்? என்ற கேள்வி நமக்குள் எழும்புகிறது. ஏன் அப்படிச்சொல்லுகிறார். அதற்கு நிச்சயமான காரணம் இருக்கும். அது என்னவென்றால்; "அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?" என்கிறார் (2கொரி.6:14). நீங்கள் எங்காவது பன்றியையும் ஆட்டுக்குட்டியையும் ஒன்றாக சேர்த்து உழவு செய்கிறதைப் பார்த்து இருக்கிறீர்களா? அப்படிச் செய்யமாட்டார்கள். அது ஒவ்வாது அதைப்போல நீதியையும் அநீதியையும் சம்பந்தப்படுத்தக்கூடாது. அப்படி சம்பந்தப்படுத்தினால் அது இணையாது. அது சரியானதும் அல்ல. ஒரு விசுவாசியோடு மற்றொரு விசுவாசிதான் சம்பந்தம் கொள்ளவேண்டும். தேவனை அறியாத அல்லது விக்கிரக ஆராதனை செய்துகொண்டு வருகின்ற ஒருவனோடு மெய்யான தேவனை தொழுதுகொண்டு வருகிற ஒருவன் ஐக்கியம் கொள்ளக்கூடாது. இதையே இங்கு அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார். ஆகையால் அசுத்தமானதை தொடாதிருங்கள் என்கிறார்.

அசுத்தமானதை நாம் தொட்டால் அது நாம் செல்லுமிடமெங்கும் எப்படி துர்நாற்றத்தை வீசச்செய்யுமோ அதைப்போல நம்முடைய வாழ்க்கை துர்நாற்றம் வீசும் வாழ்க்கையாக போய்விடும். இருள் இருக்கிற இடத்தில் ஒளி வந்தவுடன் இருள் நீங்கிப்போய்விடுகிறது. ஆகையால் ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியம் இல்லை. தேவனுடைய பிள்ளைக்கும் பிசாசின் மக்களுக்கும் ஐக்கியம் இல்லை. நாம் ஐக்கியத்தை ஏற்படுத்தவும் கூடாது.

"நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே" என 1பேது.1:16-ல் வாசிக்கிறோம். தேவன் எப்படியிருக்கிறரோ அப்படியே நாமும் இருக்கவேண்டும். ஏனெனில், நாம் தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்டுள்ளோம். அந்த சாயலை நாம் இழந்துவிடாதிருக்க அவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல நாமும் பரிசுத்தமாயிருக்க வேண்டும். நம்முடைய செயல் சிந்தை எல்லாம் பரிசுத்தமாயிருக்கவேண்டும். அசுத்தமானவர்களோடு சேர்ந்து நாமும் அசுத்தமாகிப்போய்விடாதிருக்க போதிக்கப்படுகிறோம். மேலும் ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமில்லை என பார்த்தோம். ஆம், இதைக்குறித்து யோவான் குறிப்படுகையில்; "அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது, அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை" (யோவா.1:4,5). இயேசுவானவர் இருளிலே இருக்கிற ஜனங்களுக்கு ஒளியாக வந்தார். ஆனால் அந்த ஜனங்களோ அவரை அறிந்துகொள்ளவில்லை. இன்றும்கூட அநேகர் இருளிலே மூழ்கிப்போய் இருக்கிறார்கள். நீங்கள் அந்த ஆண்டவர் இயேசுவை அறிந்திருக்கிறீர்களா? அல்லது இயேசுவை அறிந்திருக்கிற குடும்பத்தில் பிறந்தும் அவருடைய அன்பையும் அவர் வந்ததின்நோக்கத்தையும் அறியாதிருக்கிறீர்களா? "ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்; அவர்கள் கர்த்தரை அறியவில்லை" (1சாமு.2:12). ஏலி ஒரு ஆசாரியன் ஆனால் அவனுடைய பிள்ளைகளோ கர்த்தரை அறியாத பேலியாளின் மக்களாக இருந்தார்கள். இன்றைக்கும் அநேக குடும்பங்களில் இவ்விதமான பிள்ளைகளைப் பார்க்கமுடிகிறது. ஆகையால் இவ்விதமான மக்கள் தேவனை அறியாத மக்களோடு, அசுத்தமானவர்களோடு ஐக்கியம் கொள்ளுகிறார்கள். இதை வேதம் அனுமதிப்பதில்லை. "கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?" (2கொரி.6:15). கிறிஸ்துவானவர் உலகத்தின் பாவத்தைப்போக்க மனுஷகுமாரனாக அவதரித்தார். அவர் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவராக எங்கும் நன்மைசெய்கிறவராக சுற்றித்திரிந்தார் எனக் காண்கிறோம். ஆனால் பிசாசு கொல்லவும் அழிக்கவும் வருகின்றான். பிசாசையும் கிறிஸ்துவையும் இணைக்கமுடியுமா? ஆகையால் தேவனை அறியாதவர்களோடு கிறிஸ்தவர்கள் ஐக்கியத்தை ஏற்படுத்தக்கூடாது. ஐக்கியத்தை ஏற்படுத்தக்கூடாது என்றால் அவர்களோடு பேசக்கூடாது அல்லது ஒரே இடத்தில் வேலைபார்க்கக்கூடாது என்று அர்த்தமல்ல, திருமண உறவு காரிங்களில் குறிப்பாக ஈடுபடக்கூடாது என்று வேதம் போதிக்கிறது.

நெகேமியா என்ற தேவனுடைய மனுஷன் தங்களுக்குள் இருக்கிற ஜனங்களை திடசாட்சியாக கடிந்துகொண்ட ஒரு சம்பவத்தை நாம் நெகே.13:25-ம் வசனத்தில் படிக்கிறோம். "அவர்களையும் நான் கடிந்துகொண்டு, அவர்கள்மேல் வரும் சாபத்தைக்கூறி, அவர்களில் சிலரை அடித்து, மயிரைப் பிய்த்து: நீங்கள் உங்கள் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும், அவர்கள் குமாரத்திகளில் ஒருவரையும் உங்கள் குமாரருக்காகிலும் உங்களுக்காகிலும் கொள்ளாமலும் இருக்கவேண்டுமென்று அவர்களை தேவன்மேல் ஆணையிடப்பண்ணி" இருக்கின்றதை இவ்வசனத்தில் படித்து தெரிந்துகொள்கிறோம். இந்த விதமான வைராக்கியம் இருக்கவேண்டும். இதுவிஷயமாக ஊழியர் கடிந்துகொண்டு போதித்தால் உங்களுக்கு கோபம் வந்துவிடுகிறது என்பர். இங்கே நெகேமியா அவர்களுடைய மயிரைப்பிய்த்து சிலரை அடித்து எனக் காண்கிறோம். இப்படிச்செய்தால் நீங்கள்



ஸ்திரீக்கும் நிச்சயமாகவே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கும். ஏனெனில் நம்மை நாமே உயர்த்திக் கொள்ளாதபடிக்கு அது நம்மைக் குட்டும் சாத்தானுடைய தூதனாகக் கொடுக்கப்பட்டுள்ளது. நாம் அழிந்து போகாதபடிக்கு கொடுக்கப் பட்டுள்ளது. "அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை" (நீதி.16:18) என்ற வசனத்தை நினைத்துக்கொள்வோம். நம்முடைய பலவீனங்களைக் குறித்து சோர்ந்துபோகாதிருப்போம்.

பவுலுக்குக் கொடுக்கப்பட்டிருந்த முள் பலவிதங்களில் அவனைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருந்ததாகக் கூறப்படுகிறது. கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற விஷயத்தில் யூதர்கள் பவுலுக்கு அநேக உபத்திரவங்களை கொடுக்கும் முள்ளாகவும் குட்டும் சாத்தானுடைய தூதராகவும் இருந்திருக்கின்றனர். குட்டுவது (buffet) என்பது கொடூரமாகத்தாக்குவது, சரீரத்தின் எப்பக்கத்திலும் காயம் ஏற்படுத்தும் வகையில் அடிப்பது என விவரிக்கப்படுகிறது. பவுல் அநேக முறைகளில் இவ்வாறாக குட்டப்பட்டுள்ளார். "யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிக்கப்பட்டேன்; மூன்றுதம் மிலாறுகளால் அடிக்கப்பட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன்..."(2கொரி.11:23-25) என்கிறார். நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் நம்மேல் கொண்ட அன்பினிமித்தம் நம்மை மீட்கும் பொருட்டு சுவிசேஷத்தை அறிவித்தபடியினால் யூதர்களால் குட்டப்பட்டார் என மாற்.14:64-65 மற்றும் மத்.26:67ல் வாசிக்கிறோம். "அப்பொழுது சிலர் அவர்மேல் துப்பவும், அவருடைய முகத்தை மூடவும், அவரைக் குட்டவும்... தொடங்கினார்கள். நம்மையெல்லாம் உண்டாக்கின தெய்வம், பிதாவின் மடியிலிருந்தவர் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் படைத்தவர் குட்டப்பட்டார் என்ற வார்த்தை நம் இருதயங்களைக் கிழிக்கிறதாக இல்லையா? சாதாரணமாக முள் குத்துகிறது அல்லது குத்திவிட்டது என்று தான் நாம் கூறுவது வழக்கம். இங்கே அவ்விதமாக குறிப்பிடாமல் குட்டும் சாத்தானுடைய தூதன் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விதமாக இயேசுவும் கொடூரமாக அடிக்கப்பட்டார் பவுலும் கொடூரமாக அடிக்கப்பட்டார் பவுலுக்கு சரீரத்திலும் கூட சில பிரச்சனைகள் அதாவது தீடீரென்று தாக்கக் கூடிய நரம்பு சம்பந்தமான வியாதி இருந்ததாக வேத ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இதுவும் முள் போல குட்டக்கூடியதாக இருந்திருக்கும் எனக் கூறப்படுகிறது. இவ்வாறாக தொடர்ச்சியாகக் குட்டப்பட்டுக் கொண்டேயிருந்த பவுல் சோர்ந்து போய்விட்டாரா? இல்லை.

- தொடரும்

பொய்யிலிருந்து விடுதலை பெற...
கெட்டவார்த்தையிலிருந்து விடுதலை பெற...
தேவையற்றி செலவிலிருந்து விடுதலை பெற...
பெருந்தீனியிலிருந்து விடுதலை பெற...
வேண்டாத சிநேகத்திலிருந்து விடுதலை பெற...
கர்த்தருடைய பிள்ளையாக மாற...
பிறரை மதிக்க...
சபை ஆராதனைக்கு ஒழுங்காக செல்ல...
தினமும் வேதம் வாசிக்க...
யாரையும் தூஷியாதிருக்க ஜெபியுங்கள்

ஒரு சகோதரியின் கடிதம்...
எனது மகனுக்காக
ஜெபியுங்கள்



# முள் – Thorn

பெண்கள் பகுதி

-Glory Arjunan



ஆசீர்வாதங்களையே நோக்கி காத்திருக்கும் அநேக ஸ்திரீகளுக்கு இத்தலைப்பு அதிர்ச்சியைக் கொடுக்கக்கூடும். "...கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாக நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2தீமோ.3:12) என வேதம் கூறுகிறது. இக்கால பாடுகள் இனிவரும் மகிமைக்கு ஒப்பானதல்ல எனவே வரவிருக்கும் ஆசீர்வாதத்தை நினைத்து இத்தலைப்பின் செய்தியை தியானிப்போம்.

முள் என்பதற்கு தொடர்ச்சியான பிரச்சனை அல்லது எரிச்சலூட்டுகின்ற காரியங்கள், துக்கம், கவலை,தாங்கொண்ணா வேதனை என விவரிக்கப்படுகின்றது. முள் என்ற சொல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மேல் கொண்ட அன்பிற்கு அடையாள சின்னமான அவர்மேல் சூட்டப்பட்ட முள்முடியை, நமக்கு நினைப்பூட்டுகிறது. பவுலுக்கும் கூட ஒரு முள் கொடுக்கப்பட்டிருந்ததாக 2கொரி.12:7ல் வாசிக்கின்றோம். அதைக் குறித்து பவுல் கூறுகையில் "அன்றியும் எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது" என்கிறார். பவுல் தனக்கு வெளிப்படுத்தப்பட்ட மேன்மையான காரியங்களினிமித்தம் தன்னை உயர்த்தாதபடிக்கு இந்த முள் கொடுக்கப்பட்டுள்ளது எனவும், இது குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது எனவும் சொல்லுகிறார். மேலும் 2கொரிந்தியர்12:1ல் "மேன்மைபாராட்டுகிறது எனக்குத் தகுதியல்லவே;...." என்கிறார் வசனம் 11ல் "மேன்மைபாராட்டி, புத்தியீனனாயினேன்; நீங்களே இதற்கு என்னைப் பலவந்தப்படுத்தினீர்கள். நான் ஒன்றுமில்லையென்றாலும், மகா பிரதான அப்போஸ்தலருக்கும் நான் எவ்வளவும் குறைந்தவனாயிராதபடியால், உங்களாலே மெச்சிக்கொள்ளப்படவேண்டியதாயிருந்ததே" என்கிறார். பவுலுக்கு ஆவிக்குரிய ரீதியில் தன்னை மேன்மைபாராட்டிக்கொள்ள ஏதுவிருந்தும் அது தனக்குத் தகுதியில்லை என்று கூறுவதோடல்லாமல், தன்னை உயர்த்தாதபடிக்கு தன் மாம்சத்தில் கொடுக்கப்பட்டிருந்த முள் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருந்ததாகவும் கூறுகிறார்.

நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையிலும் அநேக விஷயங்களில் மேன்மைபாராட்டுவதற்க்கேதுவான அநேகக் காரியங்கள் இருக்கலாம். ஒருவேளை நான் பக்தியாகயிருக்கிறேன், ஜெபத்தில் அதிகமாகத் தரித்திருக்கிறேன், வேதம் வாசிக்கிறேன், அநேகருக்கு கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்துகொடுக்கிறேன், நான் ஜெபித்தால் பெரிய பெரிய அற்புதங்களும் அதிசயங்களும் நடக்கின்றன என்று அடுக்கிக்கொண்டே நம்மை நாமே மேன்மைபாராட்டிக் கொண்டிருக்கலாம் அல்லது நம்முடைய சரீரத்திலுள்ள பலவீனங்களைக் கூட ஒப்புக்கொள்ளாதபடி மேன்மையாகப் பேசிக்கொண்டும் கருதிக் கொண்டுமிருக்கலாம். ஆனால் கிறிஸ்துஇயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்கிற ஒவ்வொரு உண்மையுள்ள



ஏற்றுக்கொள்வீர்களா? அன்பானவர்களே, உங்களுடைய நன்மைகளுக்காகவே இப்படிச்செய்கின்றனர். சிலர் சொல்வது அவர்கள் நம்மோடு பலவருடங்களாக ஒரே ஊரில் இருக்கிறார்கள் உறவு முறை வைத்து பழகிவிட்டோம் நாம் எப்படி அவர்களை திடீர் என்று ஒதுக்குவது, இப்படி நினைத்துக்கொண்டு வேதத்தை புறம்பாக்கிப்போட்டு ஐக்கியம் கொள்ளுகிறார்கள். இவைகள் வேதாகமத்திற்கு விரோதமான ஆலோசனையாக இருக்கிறது.

"தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே" என்று பவுல் நமக்கு தெளிவாக எடுத்துச்சொல்கிறார் (2கொரி.6:16). நாம் தேவனுடைய ஆலயமாயிருக்கும்போது அதை ஒரு விக்கிரக கோவிலாக மாற்றலாமா? நம்முடைய வீட்டிற்குள் அசுத்தமானதை போட்டு வைப்போமா? அது நம்முடைய வீட்டையே நாறிக்கெட்டுப்போகப் பண்ணுமல்லவா? அப்படியிருக்க தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது, சம்பந்தமில்லாத ஒன்றை சம்பந்தப்படுத்துவோமானால் தேவனுக்கு சத்துருக்களாவோம். ஒரு முறை தேவனுடைய பெட்டியை பிடித்து அஸ்தோத் ஊரார் அதை தாகோன் கோவிலிலே போய் வைத்தார்கள். நடந்தது என்ன, "அஸ்தோத் ஊரார் மறுநாள் காலமே எழுந்திருந்து வந்தபோது, இதோ, தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து கிடந்தது; அப்பொழுது அவர்கள் தாகோனை எடுத்து, அதை அதின் ஸ்தானத்திலே திரும்பவும் நிறுத்தினார்கள். அவர்கள் மறுநாள் காலமே எழுந்திருந்து வந்தபோது, இதோ, தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து கிடந்ததுமல்லாமல், தாகோனின் தலையும் அதின் இரண்டு கைகளும் வாசற்படியின்மேல் உடைபட்டுக் கிடந்தது; தாகோனுக்கு உடல்மாத்திரம் மீதியாயிருந்தது" (1சாமு.5;3,4). இச்சம்பவம் அவர்களுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியது. கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக தாகோன் எம்மாத்திரம் என்பதை அவர்கள் உணர்ந்துகொண்டு தேவனுடைய பெட்டியை வழிவிட்டனுப்பினர். அன்பானவர்களே, விக்கிரகங்களும் தேவனுக்கும் சம்பந்தமில்லை. அதைப்போல தேவனுடைய பிள்ளைகளுக்கும் விக்கிரகாராதனை செய்கிறவர்களுக்கும் சம்பந்தமில்லை என்பதை அறிந்து கொண்டு அசுத்தமானதை தொடாதிருங்கள்.

ஒரு கிறிஸ்தவனை பார்த்து வேதாகமம் தேவனுடைய ஆலயம் என்று அழைக்கிறது. ஆதியிலே இஸ்ரவேலின் நடுவே உலாவிக்கொண்டு வந்த தேவன் இந்நாட்களில் நம்மோடு வாசம் செய்கிற தேவனாயிருக்கிறார். எங்கே என் நாமத்திலே இரண்டு மூன்றுபேர் கூடுவீர்களோ அவர்கள் மத்தியிலே இருக்கிறேன் என்று சொன்ன கர்த்தருடைய நாமத்தில் வாழுகிறவர்களாகவும் கூடுகிறவர்களாகவும் இருக்கிறோம். நாம் தேவனுடைய ஆலயம் என்றால்; கிறிஸ்துவின் சரீரமாகவும் இருக்கிறோம் என்பதை அறிந்துகொள்ளுங்கள். "உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயவங்களை வேசியின் அவயவங்களாக்கலாமா? அப்படிச் செய்யலாகாதே" (1கொரி.6:15) என்கிறார் அப்போஸ்தலனாகிய பவுல். கிறிஸ்துவானவர் எனக்குள் வாழும்போது அவருக்குப்பிரியமானதையே நான் செய்யவேண்டும் என்ற ஒரு தீர்மானம் நமக்குள் ஏற்படவேண்டும். ஒரு சிறப்பான நிர்வாக அறைக்குள்ளே அசுத்ததை யாராவது கொண்டுபோவார்களா? என்பதை

எண்ணிப்பாருங்கள். நாம் கிறிஸ்துவின் சரீரமாகவும் அவருடைய எலும்புக்கும் சரீரத்திற்கும் உரியவர்களாக இருக்கும்போது நம்முடைய சரீரத்தை வேசியின் சரீரமாக மாற்றலாமா? எப்பொழுது மாற்றுகிறோம் என்றால். தேவனுடைய உபதேசவசனங்களை தள்ளிவிட்டு வீணானவைகளுக்குச் செவிகொடுத்து அப்படிப்பட்டவைகளோடு ஐக்கியம் கொள்ளும்போது தேவனுக்கு துக்கத்தை வருவிக்கிறோம். கிறிஸ்துவுக்கு விரோதமாக பாவம் செய்கிறவர்களாயிருப்போம். "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?" என வேதம் கேள்வி எழுப்புகிறது (1கொரி.6:19). பரிசுத்த ஆவியானவர் தங்கும் இடத்தை எந்த அளவு பரிசுத்தமாக வைத்திருக்கவேண்டும். நாமே நமக்குச் சொந்தமானவர்கள் அல்ல. கிறிஸ்துவானவர் தம்முடைய இரத்தத்தை சிந்தி நம்மை பாவத்திலிருந்து மீண்டுள்ளார். முன்னே பாவத்துக்கு அடிமைகளாயிருந்த நாம் இப்பொழுது கிறிஸ்துவுக்கு அடிமைகளாயிருக்கிறோம். ஆகையால் தேவனுடைய ஆலயமாகிய உங்களுடைய சரீரத்தில் அசுத்தத்திற்கு இடமளிக்காதிருங்கள்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு சகோதரனே, சகோதரியே நீங்கள் தேவனால் உண்டானவர்கள். ஆகையால் தேவனுடைய மக்களோடு ஐக்கியம் கொள்ளுங்கள். உங்களுடைய ஆவி ஆத்துமா சரீரம் கறைபடாது காக்கப்படவேண்டும். ஏனென்றால்; தேவன் உங்களோடு ஜீவிக்கிறார். உங்களுடைய ஆத்துமா விலையேறப்பெற்றது. உங்களுடைய ஐக்கியம் எப்படியோ அப்படியே உங்களுடைய ஜீவியம் இருக்கும். சாலொமோன் ராஜா மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவன். ஆனால் அவனுடைய பின்னிலைமை மிகவும் மோசமாகிவிட்டது. அதற்கு காரணம் என்ன என்பதை அறிவீர்களா? அவன் அந்நிய பெண்களை திருமணம் செய்து கொண்டபடியினால் அவனுடைய இருதயத்தை இளைக்கப்பண்ணினார்கள். அன்பானவர்களே, நீங்கள் உங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக ஆண்டவருக்கு ஒப்புக்கொடுங்கள். பரிசுத்தத்தை வாஞ்சியுங்கள்.

**அசுத்தத்தை நாம் தொடாதிருக்கும்போது நமக்கு வரும் ஆசீர்வாதம் என்ன?**

தேவனோடு என்றென்றுமாய் வாழுவோம். ஆகையால், தேவனை அறியாத அசுத்தமான ஜனங்களாகிய பேலியாளின் மக்களை நாம் தொடாதிருந்து, அப்படிப்பட்டவர்களை விட்டுவிலகும்போதும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் சொல்லும் வசனம் என்னவென்றால்; "நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்" (2கொரி.6:18). என்னால் உலகத்தையும் உலக சிநேகத்தையும் உலக ஐக்கியத்தையும் விட முடியாது என்று சொல்லுவீர்களானால், நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கமுடியாது. தேவனுடைய பிள்ளைகளாக, தேவனுடைய ஆசீர்வாதத்திற்குப் பாத்திரவான்களாயிருக்க அசுத்தமானதைத் தொடாதிருங்கள். அப்படியென்றால் தேவனை அறியாத மக்களோடு ஐக்கியம் கொள்ளாதிருங்கள். தேவனுடைய ஜனங்களோடு ஐக்கியம் கொண்டு ஆபிரகாமின் குமாரரும் குமாரத்திகளுமாயிருந்து விசுவாச சந்ததியைப் பெற்று, கிறிஸ்து ஏற்படுத்தின அவருடைய குடும்பத்தில் இருந்துகொண்டு ஆசீர்வதிக்கப்படுங்கள். இந்த ஆசீர்வாதத்திற்கு பாத்திரவான்களாக உங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்.



## வேத அறிவுப்போட்டி 244-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. திராட்சரசத்தையும் மதுவையும் | - லேவி. 10:9 |
| 2. பவுல் | - பிலி.2:12 |
| 3. ஏழுநாள் | - எண். 19:11 |
| 4. மேலானவைகளை | - கொலோ.3:1 |
| 5. லேவி | - உபா 10:8 |
| 6. தெசலோனிக்கேயர் | - 1தெச.1:1 |
| 7. யோசுவா | - யோசு. 10:13 |
| 8. கடனாளிகளாயிருக்கிறோம் | - 2தெச.2:13 |
| 9. 22.000 பேர் | - நியா.7:3 |
| 10. இளவதுள்ள விதவைகள் | - 1தீமோ.5:13 |

**சரியான பதில் எழுதியவர்கள்**

| | |
|---|---|
| 1. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 2. Mrs. மரகதம் திரவியம் | - கோம்பை |
| 3. Mrs. பியூலா ஜேசுராஜன் | - புதுச்சேரி |
| 4. E. அதிசயம் | - பனைகுடி |
| 5. K.M. சாந்தி | - வாடிப்பட்டி |
| 6. Mrs. வசந்தாரபீந்திரன் | - தூத்துக்குடி |
| 7. A. டேவிட்ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 8. D. அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 9. Mrs.ஜாய்மேத்யூ | - வி.கே.புரம் |
| 10. P. சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 11. Mrs. ஞானம்பிலிப் | - கோவை |
| 12. Mr. எபிநேசர் எட்வர்டு | - கடலூர் |
| 13. J. விக்டர் சுவிசேஷமுத்து | - ஆனந்தபுரம் |
| 14. Sis.R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 15. M. ராமசந்திரன் | - ஒட்டநத்தம் |
| 16. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 17. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் | - கோவை |
| 18. S. சந்திரகாந்தா | - நெல்லூர் |
| 19. Mrs. ஜெயமணிராஜம்மாள் | - கடலூர் |
| 20. Mrs. ஹெத்சிசெல்வின் | - சென்னை |
| 21. J. ஆலிவ் | - கோவை |
| 22. Miss.D. சாந்தாதேவி | - பன்னைப்புரம் |
| 23. E. ஜாய்ஸ் எலன் புனிதா | - மேற்குதாம்பரம் |
| 24. B. ஞானதீபம் ஜெபராஜ் | - இடையன்குடி |
| 25. Mrs. ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 26. Mrs. ஃபிராங்களினாஜான் | - ஊட்டி |
| 27. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 28. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 29. R. அந்தோணியம்மாள் | - கலுங்குவிளை |
| 30. Mrs. மேரிநிரிமலாஆபிரகாம் | - மதுரை |
| 31. Mrs. ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 32. J. மேரிஜெயக்குமாரி | - மதுரை |
| 33. S. செல்வராஜ் சாலமோன் | - வள்ளியம்மாள்புரம் |
| 34. A. ஆலிஸ்குணசீலி | - சாயர்புரம் |
| 35. Mrs. பாலின்டேனியேல் | - சென்னை |
| 36. S. ஹோசியா ஹரிராகவன் | - திருவள்ளூர் |
| 37. S. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 38. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 39. Mrs. ரூத்ஜெயராணி அன்புராஜ் | - பெருமாள்புரம் |
| 40. T. ராஜாத்தி | - கோம்பை |
| 41. K. ராணிமூர்த்தி | - ஏர்வாடி |
| 42. Mrs. ஜெபக்குட்டிமோசஸ் | - மருதகுளம் |
| 43. Mrs. ரூபவல்யா | - நாசரேத் |
| 44. Mrs. சாந்தாபழனி | - தருமபுரி |
| 45. Mrs. ஜெயாபாணி ஜெபராஜ் | - மேற்குதாம்பரம் |
| 46. D. தேவபுஸ்பம் | - நாசரேத் |
| 47. S. ரெஜினாசெல்வராஜ் | - நாசரேத் |
| 48. D. கமலா | - கலூங்குவிளை |
| 49. J. பிச்சை | - சங்கரலிங்கபுரம் |
| 50. Mrs. ருக்மணிஜெயசீலன் | - பன்னைப்புரம் |
| 51. M. முருகன் | - பில்லிகல்பாளையம் |
| 52. Mrs. ஜெனிதர்மராஜன் | - பாக்கியநாதபுரம் |

## வேத அறிவுப்போட்டி 245-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. தாகோனின் | - 1சாமு. 5:2 |
| 2. தீமோத்தேயு | - 2தீமோ.1:6 |
| 3. தாவீது, யோனத்தானுக்காக | - 2சாமு.1:26 |
| 4. தீத்து | - தீத்து 2:9 |
| 5. யூதாவின் ராஜா யோசபாத் | - 1இரா.22:4 |
| 6. குமாரன் மூலமாய் | - எபி.1:1 |
| 7. ஏசாயா | - 2இரா.20:11 |
| 8. யாக்கோபு | - யாக்.1:7 |
| 9. இல்லை | - 1நாளா.27:23 |
| 10. பேதுரு | - 1பேது.5:7 |

**சரியான பதில் எழுதியவர்கள்**

| | |
|---|---|
| 1. E. அதிசயம் | - பனைகுடி |
| 2. K. ராணிமூர்த்தி | - ஏர்வாடி |
| 3. Mrs. ஜெயமணிராஜம்மாள் | - கடலூர் |
| 4. A. டேவிட்ஜெயச்சந்தின் | - மதுரை |
| 5. Tmt. மரகதம்திரவியம் | - கோம்பை |
| 6. R. அந்தோணியம்மாள் | - கலூங்குவிளை |
| 7. S. செல்வராஜ்சாலமோன் | - வள்ளியம்மாள்புரம் |
| 8. B. ஞானதீபம்ஜெபராஜ் | - இடையன்குடி |
| 9. P. சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 10. Mrs. பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 11. Mrs. ரூபவல்யா | - நாசரேத் |
| 12. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 13. Mrs. ஞானம்பிலிப் | - கோவை |
| 14. J. ஆலிவ் | - கோவை |
| 15. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 16. Mrs. ஜெபக்குட்டிமோசஸ் | - மருதகுளம் |
| 17. Mrs. வசந்தாரபீந்திரன் | - தூத்துக்குடி |
| 18. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் | - கோவை |
| 19. J. பிச்சை | - சங்கரலிங்கபுரம் |
| 20. A. ஆலிஸ்குணசீலி | - சாயர்புரம் |
| 21. Mrs. ஜெபா நியூட்டன் | - திருநெல்வேலி |
| 22. Mrs. இராஜம்மாள் | - சென்னை |
| 23. C. அருள்ராஜ் | - சென்னை |
| 24. S. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 25. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 26. D. விஜயகாந்தி | - வேலூர் |
| 27. D. அன்புக்மலம் | - காரைக்குடி |
| 28. Mrs. ஜேன்தர்மராஜ் | - பாக்கியநாதபுரம் |
| 29. Mrs. பியூலாஜேசுராஜன் | - பாண்டிச்சேரி |
| 30. Mrs. பாலின்டேனியேல் | - சென்னை |
| 31. Mrs. ஏஞ்சலின்நேசமலர் | - சாந்தாபுரம் |
| 32. S. ஜாய்ஸ் சந்திரா | - நெல்லூர் |
| 33. T. இராஜாத்தி | - கோம்பை |
| 34. Mrs. ஜாய்மேத்யூ | - வி.கே.புரம் |
| 35. Mrs. ஹெத்சி செல்வின் | - சென்னை |
| 36. Mrs. ஃபிராங்களினாஜான் | - ஊட்டி |
| 37. Mrs. கிரேஸ்சங்கீதா | - தூத்துக்குடி |
| 38. P. முருகன் | - தூத்துக்குடி |
| 39. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 40. Mrs. சாந்தாபழனி | - தருமபுரி |
| 41. D. தேவபுஷ்பம் | - நாசரேத் |
| 42. S. ரெஜினாசெல்வராஜ் | - நாசரேத் |
| 43. Mrs. ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 44. S. ஹரிராகவன் | - வேப்பம்பட்டு |
| 45. Sis.R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 46. M. ராமசந்திரன் | - ஒட்டநத்தம் |
| 47. Mrs.ரூக்மணி ஜெயசீலன் | - தேனி |
| 48. Mrs. ஜாய்ஸ் எலன் புனிதா | - மேற்கு தாம்பரம் |
| 49. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 50. Mrs. மேரிநிர்மலா ஆபிரகாம் | - மதுரை |
| 51. D. சாந்தாதேவி | - பன்னைப்புரம் |
| 52. J. மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 53. A. சுவாமிநாதன் | - அம்பலம் |
| 54. Mrs. நிர்மலாஎழில் | - சேலம் |
| 55. J. விக்டர்சுவிசேஷமுத்து | - ஆனந்தபுரம் |
| 56. Mrs. ஜெபாமோசஸ் | - தூத்துக்குடி |
| 57. Mrs. ஜெயபானிஜெபராஜ் | - மேற்குதாம்பரம் |
| 58. Mrs. ஞானம்பிலிப் | - கோவை |

## VII சபையின் பணி:

சபையின் மனுஷர் மூப்பராக, உதவிக்காரர்களாக, போதகர்களாக தலைமைத்துவத்தை மேற்கொள்ளும்படி தேவன் நியமித்துள்ளார். ஏதேனும் செய்யும்படி வேலை ஸ்திரீகளுக்கு இருக்கிறதா? ஆம்! "கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும் புத்திசொல்லுகிறேன். அன்றியும் என் உத்தம கூட்டாளியே, அவர்களுக்கு உதவியாயிருக்கும்படி உன்னையும் வேண்டிக்கொள்கிறேன்; ...சுவிசேஷ விஷயத்தில் என்னோடேகூட மிகவும் பிரயாசப்பட்டவர்கள்..." (பிலி.4:2,3).

1. நாம் சபை கூடுகைக்கு (ஆராதனைக்கு) நம்முடைய வீட்டை திறந்து கொடுக்கலாம். இந்தப் பணி பவுலால் நன்றியறிதலோடுகூட ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதின தன்னுடைய நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. "வகுப்பறை" சூழலில் நாம் மற்ற ஸ்திரீகளுக்கும் சிறுபிள்ளைகளுக்கும் போதிக்கலாம்.

3. சபை கூடிவரும் இடத்தைச் சுத்தம் செய்வதன் மூலமும், கர்த்தருடைய பந்தி பாத்திரத்தைக் கழுவுவதன் மூலமும், சரீரப்பிரகாரமான வசதிசெய்வதில் தேவைப்படும் வேறெந்த வேலையைச் செய்வதன் மூலமும் நாம் உதவிசெய்யலாம்.

4. நாம் சபையில் நோயுற்ற அல்லது தேவையில் உள்ளவர்களுக்கு என்னவெல்லாம் கொடுத்து உதவிடமுடியுமோ அவைகளைச் செய்ய செக் போன்றவற்றை வைத்து பராமரிக்கலாம்.

5. சுவிசேஷக் கூட்டம் நடைபெறும்போது மற்ற பிராந்திய சபையிலிருந்து வரும் பிரசங்கியார்களுக்கு அல்லது பார்வையாளர்களுக்கு நம்முடைய வீட்டை திறந்து கொடுத்து கிறிஸ்தவ உபசரிப்பினை அவர்களுக்குச் செய்யலாம்.

6. நாம் வாரந்தோறும் கர்த்தருடைய பந்திக்கான அப்பத்தை தயார் செய்யலாம். இதோ செய்முறை:

**கர்த்தருடைய பந்தி அப்பத்திற்கான செய்முறை**

1. 1 கப் தனி கோதுமை மாவு
2. 1/4 கப் ஒலிவ எண்ணெய் (அல்லது பிறவகைகள்)
3. 1/4 கப் தண்ணீர்

சிறிது உப்பு

எல்லாவற்றையும் கலந்து நன்கு பிசையுங்கள். சப்பாத்தி அல்லது ரொட்டி போல சுடுவதற்கு ஆயத்தப்படுத்துங்கள்.

ஜெபியுங்கள்

- இந்த மாதத்தை கொடுத்த தேவனுக்கு நன்றி சொல்லி...
- வரவிருக்கும் சட்டமன்ற தேர்தலுக்காக...
- இந்திய விவசாயிகளுக்காக...
- உலக சமாதானத்திற்காக...
- இந்திய ஊழியங்களுக்காக...
- கொரோனா தொற்றிலிருந்து உலக நாடுகள் விடுதலைபெற...
- பாலியல் வண்கொடுமை முற்றிலும் ஒழிக்கப்பட...





# நாம் ஏன் வாரத்தின் முதல் நாளில் கூடுகிறோம்

**Why We Meet On The First Day of the Week** *-J.C.Choate*



கர்த்தருடைய சபை அங்கத்தினர்களும், கிறிஸ்தவர்களுமாகிய நாம் தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் என வேதாகமம் போதிக்கிறது (யோவா.4:24). நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்பதை புரிந்து கொண்டு உண்மையோடு ஆராதிக்க வேண்டுமென்பது இதன் பொருள். மேலும் நாம் இதை கர்த்தருடைய வார்த்தையின்படி செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம். ஆனால் வினாவானது: நாம் அதை எப்பொழுது செய்ய வேண்டும்? மேலும் எப்படிச் செய்ய வேண்டும்? வெள்ளி, சனி ஞாயிறு அல்லது வாரத்தின் வேறு நாட்களில் அதைச்செய்ய வேண்டுமா? ஆராதிக்கும்படி நாம் கூடிவருவது உண்மையாகவே முக்கியமான காரியமா?

பழைய ஏற்பாடு முழுமையும் நாம் வாசிக்கையில் தேவன் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலர் ஓய்வு நாளை நினைவுகூரவும் அதைப் பரிசுத்தமாய் ஆசாரிக்கவும் வேண்டுமென கேட்டுக்கொண்டாரென நாம் பார்க்கிறோம். இது பத்துக்கட்டளைகளில் ஒன்று (யாத்.20:8-11). ஆனால் நாம் கிறிஸ்துவின் நாட்களுக்கு வரும் போது, கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது அவர் பழைய கட்டளையை அல்லது தேவனுடைய ஜனங்கள் ஓய்வு நாளை அநுசரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட கட்டளையை எடுத்துப்போட்டார் என நாம் கற்றுக்கொள்கிறோம் (யோவா.1:17, கொலோ.2:14; எபி.9:15-17). ஆனபடியால், பழைய கட்டளை நீக்கப்பட்டபோது, அது புதிய கட்டளையால் அப்புறப்படுத்தப்பட்டது. அந்த நிகழ்வு உண்மையானது. ஓய்வு நாள் கட்டுப்படுத்தப்படும்படிக்கு ஒழிந்தது, அந்த சமயத்தில் தானே, கர்த்தர் தம்முடைய ஜனங்கள் ஆராதனை செய்யும் நோக்கத்தில் கூடி வரும்படி ஒரு புதிய நாளை அறிமுகப்படுத்தினார். அந்த நாள் வாரத்தின் முதல் நாளாகும். அதன் படியே ஓய்வு நாள் சனிக்கிழமையில் வந்தது அல்லது வாரத்தின் ஏழாம் நாளில் வந்தது ஆனால் இப்பொழுது அவர் ஆராதனையில் கிறிஸ்துவை முதன்மையாகவும் மற்ற எல்லாவற்றிலும் மேலானதாகவும் வைக்கும்படி நம்மை எதிர்பார்க்கிறார்.

வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டு பகுதி வாரத்தின் முதல் நாளைப்பற்றிச் சொல்லுவதற்கு அதிகமான ஆதாரங்களைக் கொண்டிருக்கிறது நாம் இப்பொழுது இந்த நாள் ஏன் மிக முக்கியமானது, மேலும் நாம் ஆராதிக்கும்படிக்கு ஏன் வாரத்தின் முதல் நாளில் கூடிவரவேண்டும் என்பதற்கு பல காரணங்களைக் குறிப்பிடுவதற்கு நேரம் எடுத்துக்கொள்வோம்.

**முதலாவது**, கிறிஸ்து வாரத்தின் முதல்நாளில் உயிரோடெழுப்பப்பட்டார், ஓய்வுநாள் வாரத்தின் பரிசுத்த நாளாக இன்னுமிருந்தால் அல்லது தேவனுடைய

ஜனங்கள் ஆராதிக்கும்படி இன்னும் கூடிவரவேண்டுமென்று இருந்தால், பின் ஏன் கிறிஸ்து வாரத்தின் முதல் நாள் அல்லது ஞாயிற்றுக் கிழமையில் எழுப்பப்பட்டார்? ஓய்வுநாள் ஒரு பரிசுத்தமான நாளாய் இருந்தபடியினால் அந்த நாளில் அவர் உயிரோடெழுப்பப்படாததற்குக் காரணமென்ன என நிச்சயமாக விவாதிக்கக் கூடியதாக இருக்கலாம். ஆனால் ஓய்வு நாள் இன்னும் கட்டுப்படுத்திக் கொண்டிருக்குமானால், கல்லறையிலிருந்து கிறிஸ்து எழுந்த அந்தநாள் எவ்வளவு அதிகப்பரிசுத்தமாயிருந்திருக்கும்? உண்மையாகவே, அந்த நாள் ஆராதனைக்குரிய புதிய நாளாக இருக்கும்படிக்கே அந்த நாளை முக்கியப்படுத்த கிறிஸ்து வாரத்தின் முதல் நாளில் எழுந்தார். நாம் மத்.28:1க்கு திரும்புகையில், நாம் வாசிக்கலாம், "ஓய்வு நாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில், மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள்". தொடர்ந்து வாசிக்கையில், அந்த நாளில் கர்த்தர் உயிரோடெழுப்பப்பட்டிருந்ததைப் பற்றி அறிவுறுத்தப்படுகிறோம். நாம் இதே காரியத்தை மாற்கு 16:1,2லும் அதைப்போல லூக்.24:1,2 மற்றும் கடைசியாக யோவா.20:1-லும் வாசிக்கிறோம்.

**இரண்டாவது,** வாரத்தின் முதல் நாளிலே கல்லறையிலிருந்து கிறிஸ்து உயிரோடெழுப்பப்பட்ட பின்பு அவர் தம்முடைய சீஷர்களைச் சந்திக்க இரு வேறு சூழ் நிலைகளைப் பொருத்தமானதாகக் கண்டார். இரு நிகழ்வுகளுமே வாரத்தின் முதல் நாளிலே நடைபெற்றாகச் சொல்லப்படுகிறது என நாம் வாசிக்கிறோம், "வாரத்தின் முதல் நாளாகிய அன்றையத்தினம் சாயங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று; உங்களுக்குச் சமாதானம் என்றார் அவர் இப்படிச்சொல்லித் தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள்" (யோவா.20:19,20). மீண்டும் வாசிக்கிறோம், "மறுபடியும் எட்டுநாளைக்குப்பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்; தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான்; கதவுகள் பூட்டப்பட்டிருந்தது, அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். பின்பு அவர் தோமாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான். அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்" (யோவா.20:26-29). இப்பொழுது இயேசு வாத்தின் முதல் நாளிலே கல்லறையிலிருந்து வெளியே வந்து, அந்த நாள் சாயங்காலத்தில் சீஷர்களுக்குத் தரிசனமாகி, எட்டுநாட்களுக்குப் பிறகு மீண்டும் சீஷர்களுக்குத் தரிசனமாகி இருந்தாரென்றால், அவர் மீண்டும் அவர்களை வாரத்தின் முதல் நாளிலே சந்தித்தார் என அர்த்தமாகாதா? வாரத்தின் முதல் நாளுக்குரிய சிறப்பம்சத்தை பெற்றிருக்கவில்லையென்றால் இந்த அனைத்து சம்பவங்களும் வாரத்தின் முதல் நாளிலே நடந்தேறியதென வேதவாக்கியங்கள் அறிவுறுத்துகின்றன என்று இது புதியதாகத் தோன்றவில்லையா? எப்படியாகிலும்



சிணுங்குதல்கள், திடீரென கோபம் சினம் கொள்ளுதல் போன்றவற்றிற்கு நான் எதிர்ப்பதை நிறுத்த மாட்டேன் நான் என்ன சொல்கிறேன் என்பதை வலியுறுத்தி அதற்குக் கீழ்ப்படியச் செய்ய வேண்டும்.

6. அவசியம் ஏற்படும்போது, கீழ்ப்படியாத, முரண்டு பிடிக்கிற ஒரு பிள்ளையை சரிசெய்யும்படிக்கு கட்டுப்பாட்டை பயன்படுத்த வேண்டும்.

அந்த சிறுபிள்ளை மற்றும் அதனுடைய கீழ்ப்படியாமைக்கு ஏற்றாற்போல இவைகளை நடப்பிக்க எண்ணற்ற வழிகள் உள்ளன.

A. சில நேரங்களில் போதுமான சிறப்புரிமையை நீக்கிவிடுதல்போதுமானது.

B. சிலநேரங்களில் கையில் மேல் அல்லது பின்பகுதியில் வேகமாக ஓர் தட்டு தட்டுதல் போதுமானது.

C. சிலநேரங்களில் யாருமில்லாத இடத்திற்கு தனியாக அனுப்பிவிடுதல் (இரக்கத்திற்காக அழும் குரலை கேட்க யாருமில்லையெனில் தானாகவே அழுகையை நிறுத்திவிடுவர்) போதுமானது.

7. ஆனால் மேலுள்ள அனைத்திலும் முக்கியமானது. ஆழமான அன்பின் கயிற்றினால் என்னுடைய பிள்ளைகளோடுள்ள முழு உறவினாலும் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும், செயலினால் மட்டும் அல்ல, ஆனால் பேச்சினாலும் அவர்கள் எனக்கு எவ்வளவு பிரியமானவர்கள் என்று காட்டவேண்டும்.

**VI விரிவுப்படுத்தப்பட்ட குடும்பத்தில் உறவு:** ஒருவேளை நீங்கள் கிறிஸ்தவ பெற்றோர்கள், கிறிஸ்தவ சகோதரர்கள் மற்றும் சகோதரிகளைக் கொண்ட ஆசீர்வதிக்கப்பட்ட ஸ்திரீகள் மத்தியில் - ஆவிக்குரிய உதவியினை ஒவ்வொரு திசையிலிருந்து பெறுகிறவர்களாக இருக்கலாம். இப்படி இருக்குமானால் நீங்களும் அவர்களும் ஒவ்வொருவரிடமிருந்தும் பலத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

1. உங்களுடைய குடும்பத்தில் கர்த்தருடைய சபை அங்கத்தினர்களாயிராத நபர்கள் இருப்பார்களென்றால் அவர்கள் முன் நீங்கள் வாழும் வாழ்க்கை உங்களுக்கும் உலக உறவுகளுக்குமிடையே இருக்கும் வித்தியாசத்தினைக் காண அவர்களுக்கு உதவியாக இருக்கும். அன்பாயிருங்கள், உதவியாக இருங்கள், சுயநலமற்றவர்களாக இருங்கள்; கடினமாகவும், நியாயந்தீர்க்கிறவர்களாகவும், எப்போதும் சண்டையிட எத்தனமாகவும் இராதீர்கள். நீங்கள் ஒரு மாமியாராக இருந்தால் உங்கள் மருமகனை அல்லது மருமகளை அன்போடும் கண்ணியத்தோம், உங்கள் குடும்பத்திற்குள் பிறந்தவர்களைப் போலவும் உங்கள் மருமக்களை நீங்கள் விரும்புகிறவர்கள் என்பது போலவும் நடத்துங்கள். ஒவ்வொரு உறவுமுறையிலும் வேதாகமத்தின் "தங்கக் கட்டளை" நேர்த்தியாக வேலை செய்கிறது. "....மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்..." (மத்.7:12).

2. அந்த நடவடிக்கை உங்களிடத்திற்குத் திரும்பாதிருந்தாலும் கூட, அந்த நடத்தை கோபம் கொள்வதிலிருந்தும் உங்களுடைய இருதயத்தின் வெறுப்பிலிருந்தும் உங்களைக் காக்கும், எனவே இது ஆவிக்குரிய நீதியிலும் சரீரப்பிரகாரமாகவும் தீமையிலிருந்து உங்களைப் பாதுகாக்கிறது.

பெண்கள் பகுதி

## ஒரு கிறிஸ்துவளாக என்னுடைய சொந்த வாழ்க்கையும் வளர்ச்சியும்

### My Personal Life and Development As a Christian

*-Betty*

- சென்ற மாத இதழின் தொடர்ச்சி

**V. பிள்ளைகளுக்குத் தாய்:**



என் கணவனுக்கு ஏற்ற உதவியாளராக என் வேலையைச் செய்த பின், என்னுடைய மிக முக்கியமான கவனம் என்னுடைய பிள்ளைகள் மீது தான்.

1. கருத்தரித்தல் முதல் பிறக்கும் வரையிலும் மேலும் குழந்தைப்பருவத்தின் உதவியற்ற நாட்கள் முழுவதும், அவர்களுடைய உடல்ரீதியான தேவைகளுக்காக நான் ஒவ்வொன்றையும் செய்து கொடுக்க என்னால் கண்டிப்பாக முடியும்.

2. நான் அவர்களுடன், அவர்களின் அப்பாவுடன், நம்மைச் சுற்றியுள்ள ஒவ்வொருவருடன் உறவாடுவதன் மூலம் கிறிஸ்தவ குணாதிசயங்களை அவர்களுக்கு நிச்சயமாக போதிக்க வேண்டும். நாள் முழுவதும், நான் அவர்கள் தேவனுடைய வார்த்தையையும் அவரோடுகூட வளரும் ஐக்கியத்தையும் உணரும்படி செய்ய வேண்டியவளாயிருக்கிறேன்.

3. ஒவ்வொரு நாளின் ஒரு பகுதியான குடும்ப பக்திக்குறிய ஜெப நேரத்தை அவர்களுடைய தகப்பன் வழிநடத்திச் செல்வதும், ஆனால் நம்மெல்லோருக்குமிடையே கேள்விகளுடன் அதைக் குறித்த விவாதத்துடனும் கலந்துரையாடல் இருக்க வேண்டும். அவர்கள் வசனங்களை மனப்பாடம் செய்வது அவசியம், பள்ளி பாடத்தினைப் படிப்பதில் மாத்திரம் அவர்களுக்கு உதவிசெய்கிறவர்களாக நான் இராமல், வேத வகுப்புப் பாடங்களைப் படிப்பதில் உதவுகிறவளாய் இருக்க கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களும் (அல்லது நானும்) சிறுபிள்ளைகளின் வேதாகம பாடல்களை அறிந்திருந்தால், நாம் வீட்டிலே அவர்களோடு சேர்ந்து பாடலாம்.

4. ஆராதனையின் அனைத்துப் பகுதிகளும் என்னவென்பதைக் குறித்து அவர்களுக்கு நான் போதிக்க வேண்டும், அதாவது அவர்கள் ஆராதனை வேளையில் அமைதியாக இருக்க வேண்டும். தேவனுக்கு மரியாதை செலுத்த வேண்டும், நாம் தேவனுடைய சமூகத்திலிருக்கிறோம் என்றும், நாம் அவருடைய பரிசுத்த தூதர்களால் சூழப்பட்டிருக்கிறோம் என்றும் அவர்களுக்கு போதனை செய்கிறவளாக இருக்க வேண்டும்.

5. நான் அவர்களுக்கு பின்பற்றும்படி கட்டளைகளையும், வரையறைகளையும் ஏற்படுத்த வேண்டும்.

("இல்லை" அல்லது "இதைச் செய்") என்ற கட்டளையை பிறப்பிக்கும் முன்பே நான் நியாயத்தீர்ப்பினையும் சுயக் கட்டுபாட்டினையும் பயிற்றுவிக்க வேண்டும். ஏதோ ஒன்றைச் செய்ய வேண்டுமென்று நான் சொல்லும்போது அவர்களுடைய குழந்தைத் தனமான சாக்குப்போக்குகள், விம்மல்கள்,



இயேசு வாரத்தின் முதல் நாளிலே கல்லறையிலிருந்து வெளியே வந்து இருவேறு சூழ்நிலைகளிலும் வாரத்தின் முதல் நாளிலே அவர் சீஷர்களை சந்தித்தார் என இந்த நிகழ்ச்சிக்கு ஒரு பெரிய சிறப்பம்சம் இருந்ததென்று நான் உங்களுக்கு சுட்டிக்காட்டுகிறேன்.

**மூன்றாவது,** பெந்தெகொஸ்தே நாள் வாரத்தின் முதல் நாளில் வந்தது, பஸ்காவிற்குப் பின் ஐம்பதாவது நாள் அது. அப்போஸ்தலர் 2-ன்படி அப்போஸ்தலர் மேல் பரிசுத்த ஆவியை அனுப்பும்படிக்கும், முதன்முறையாக சுவிசேஷம் அந்த நேரத்தில் பிரசங்கிக்கப்படும்படிக்கும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் இரட்சிக்கப்படும்படிக்கு என்னசெய்யவேண்டுமென சொல்லும்படிக்கும், அந்தநாளில் சபை ஸ்தாபிக்கப்படும்படிக்கும் கர்த்தர் இந்த நாளைத் தெரிந்துகொண்டாரென அர்த்தமாகிறது. இப்பொழுது வாரத்தின் முதல் நாளில் ஒரு சிறப்பு முக்கியத்துவம் இடம்பெறவில்லையென்றால், என்ன நடந்திருக்கும்? வாரத்தின் மற்ற நாட்களுக்கும் மேலான நாளாக இந்த நாள் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதற்கு ஏதோ, சிறப்பான காரணம் கண்டிப்பாக இருந்திருக்க வேண்டுமென்பது மிக உண்மை. உதாரணமாக, ஓய்வு நாள் இன்னும் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தால், பின் ஏன் கர்த்தர் பின்வரக்கூடிய நாளுக்குப் பதிலாக அந்த நாளை அனுசரிக்கும்படி தெரிந்து கொள்ளவில்லை? ஆராதிக்கும்படியான நாளான வாரத்தின் முதல் நாளினால் அந்த ஓய்வு நாள் கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் கிறிஸ்தவர்களின் காலத்தில் பழையநிலைக்கு மாற்றப்பட்டிருந்தது.

**நான்காவது,** தேவனை ஆராதிக்கும்படி ஆதி கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் கூடிவந்ததற்கு நாம் ஓர் உதாரணத்தைப் பெற்றிருக்கிறோம். நாம் வாசிக்கிறோம், "வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்" (அப்.20:7) என வாசிக்கிறோம். நாம் இந்தக் குறிப்பை கவனிக்கையில் பவுலும் மற்றவர்களும் வாரத்தின் முதல் நாளிலே சபையோடுகூட கூடிவரும்படிக்கு கப்பல் ஏறி பிலிப்பு பட்டணத்தை விட்டு துரோவாபட்டணத்துக்கு வந்து, அங்கே ஏழு நாட்கள் தங்கியிருந்தார்கள் என அறிவுறுத்தப்படுகிறோம் என்பதை இதன் மூலம் நாம் திட்டமாக காணமுடிகிறது அதாவது ஏழாம் நாள் அல்லது மற்ற நாள் ஆராதனை நாளாயிருந்திருக்குமானால், அவர்கள் தங்கள் கூட்டத்தோடுகூட அங்கிருந்த கிறிஸ்தவர்களுடன் ஆராதனையை நடத்தியிருந்திருக்கலாம் அதன்பின் தங்களுடைய பிரயாணத்தைத் தொடர்ந்திருந்திருக்கலாம். மாறாக, கர்த்தர் தம்முடைய ஜனங்கள் கூடி ஆராதிக்கும்படி நியமித்திருந்த அந்த நாளில் ஆராதிக்க வேண்டுமென வாரத்தின் முதல் நாள் வரும்வரைக்கு அவர்கள் காத்திருந்தார்கள். அதன் பின் எந்த நாளில் என்ன நடந்தது? அந்த காரியத்திற்காக சீஷர்கள் அந்த நாளில் கூடி வந்தார்கள். ஏன் அவர்கள் கூடிவந்தார்கள்? அவர்கள் அப்பம் பிட்கும்படி கூடி வந்தார்கள் என வேதம் கூறுகிறது. மேலும் அவர்கள் கிறிஸ்துவின்

சரீரத்தையும் இரத்தத்தையும் நினைவுகூரும்படிக்கு கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளும்படி கூடி வந்தார்களென இந்நிகழ்ச்சிக்கு ஆதாரத்தைக் கொண்டிருக்கிறது (1கொரி.11:23-29). அதன் பொருள், வேதாகம உதாரணத்தின் மூலம், கிறிஸ்தவர்கள் அப்பம் பிட்கும்படி கூடிவந்த நாள் வாரத்தின் எந்த முதல் நாள்? நிச்சயமாக வாரத்தின் ஒவ்வொரு முதல் நாளே. ஏழாம் நாள் ஆராதனைக்குரிய நாளாக இருந்த பழைய ஏற்பாட்டுக் காலத்திற்குத் திரும்புங்கள், தேவன் ஒவ்வொரு ஓய்வுநாளையும் அவர்கள் நினைவுகூரும்படி சொல்லவில்லை, ஆனால் ஓய்வு நாளை நினைவுகூரும்படி மாத்திரம் சொன்னார். அவர்களுக்கு அந்த நாளை நினைவுகூரவேண்டுமென்பது அவர்கள் எல்லாவற்றையும் அல்லது ஒவ்வொரு ஓய்வுநாளையும் நினைவுகூரவேண்டுமென்பதாகும்.

வாரத்தின் முதல் நாளில் கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்வது பற்றிய விஷயத்தில் இதே காரியம் உண்மையே. அந்த கூட்டத்தில் அவர்கள் சில போதனைகளைப் பெற்றிருந்தார்கள். வேதவாக்கியம் பவுல் போதித்தார் எனவும் தன்னுடைய போதனையை நடுராத்திரிவரை தொடர்ந்தார் எனவும் கூறுகிறது. இருந்தபோதிலும் அவர்கள் ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார்கள் அல்லது பாடல் பாடுவதில் ஈடுபட்டிருந்தார்கள் என்றோ மேலும் இதுபோன்ற காரியங்களில் ஈடுபட்டிருந்தார்கள் என்றோ இது சொல்ல வில்லை. ஆனால் பவுலும் மற்ற கிறிஸ்தவர்களும் அந்த நாளில் கூடி வாரத்தின் முதல் நாளில் அப்பம் பிட்டு தேவனை ஆராதித்தார்கள். அப்படியென்றால் நாம் கிறிஸ்தவர்களாயிருந்தால், நாமும் அதே காரியத்தைச் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம் என்றே பொருள்படுகிறது.

**ஐந்தாவதாக,** பவுல் தன்னுடைய நாட்களில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு வாரத்தின் முதல் நாளிலே ஏதாகிலும் சேர்த்துவைக்க வேண்டும் அல்லது தங்களுடைய வருமானத்திலிருந்து கொடுக்க வேண்டுமென அங்கே கட்டளையிட்டார் என வாசிக்கிறோம். ‘‘பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மபணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும், தன்தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக் கடவன்’’ (1கொரி.16:1,2) என வாசிக்கிறோம். இங்கே கலாத்தியா மற்றும் கொரிந்துவிலிருந்த இரு சபைகளுக்கு வாரத்தின் முதல் நாள்தோறும் கொடுக்க அல்லது சேர்த்துவைக்கும்படி அறிவுறுத்தியிருக்கிறார். கொடுக்கும் மனநிலையைப் பற்றியும், எவ்வளவு கொடுக்க வேண்டுமென்பது பற்றியும், கொடுக்கும் நோக்கத்தைப் பற்றிச்சொல்லுவதற்கு அதிகமதிகமான ஆதாரங்கள் உண்டு, ஆனால் கொடுக்கும் செயல் வாரத்தின் முதல் நாள் தோறும் நடைபெற வேண்டியிருந்தது என்று இங்கே நாம் காண வேண்டியது முக்கியமான காரியமாகும். ஆச்சரியம் மற்ற நாளில் கொடுப்பதற்குப் பதிலாக வாரத்தின் முதல் நாளில் செய்யப்படவேண்டியது ஏன்? ஏனென்றால் கிறிஸ்தவர்கள் ஆராதிக்கும்படி கூடிவரவேண்டிய வேதாகமத்தின் நாளானது இந்நாளே என்பது



போதகத்தையும் தடை செய்கிறது. பல பிராந்திய சபைகள் வேதவாக்கியங்களுக்கு மாறான ஒரு வழக்கத்தை தொடங்குமேயாகில் மற்றசபைகள் உண்மையுள்ளவைகளாயிருக்கும், ஏனென்றால் அவைகள் சுதந்திரமானவைகளாயிருக்கின்றன. தேவன் சுதந்திரமான சபைகளை விரும்புகிறார், ஏனென்றால் இத்திட்டம் சிறப்பானதலைவர்களை மற்றும் அங்கத்தினர்களை உருவாக்கி கொடுத்தல் மற்றும் பணியை முன்னேற்றம் அடையச் செய்து விசுவாச வீழ்ச்சி பரவுவதை தடைசெய்கிறது.

**கேள்விகள்**

1. ரோமர்15:14 உரைத்தது அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் ----------- வல்லவர்களாயிருந்தார்கள் என்று.

2. காலத்தைப் பார்த்தால் நீங்கள் ----------------- ------------- இருக்கிறது என்று எபி.5:12 சொல்கிறது.

3. ஏன் என்று நாம் காணமுடியாவிட்டாலும் கூட தேவனுடைய திட்டத்தை நாம் பின்பற்ற வேண்டுமா?----------.

4. கிறிஸ்தவம் ஒரு நபருடைய சிறந்த --------- வெளிக்கொண்டு வருகிறது.

5. மனுஷர் --------- னாலே போதிக்க கற்றுக்கொள்கிறார்கள்.

6. கொடுக்கிற ஒருவர் சரியாக கொடுக்கும்படி அவர் அவசியம் ---------- பார்க்கவேண்டும்.

7. எந்த ஒரு நிறுவனமும் ஒரு அங்கத்தினருடைய ----------- அவருக்காக செய்யாது.

8. ஒன்று சேர்த்து கட்டப்பட்டிருக்கிற கற்கள் ------------- இல்லை.

9. விசுவாசத்திலிருந்து விழுந்துபோன ஒரு சபை மற்றொரு சபையை -------- வழிநடத்தாது.

10. சுயாதீனமுள்ள சபைகளுக்கான நல்ல காரணங்களை நாம் காணமுடியுமா?-------------,

**நடப்புச் செய்திகள்**

- ❒ கோவையில் இருந்து கோவா, தாஜ்மஹாலுக்கு ரயில் மூலம் சுற்றுலா செல்ல முன்பதிவு தொடக்கம்.
- ❒ உலகம் முழுவதும் கொரோனா தாக்கம் இன்னும் இருந்துகொண்டதான் இருக்கிறது.
- ❒ தமிழகம், புதுச்சேரி, கேரளம், மேற்குவங்கம், அசாம் உள்ளிட்ட 5 மாநிலங்களின் சட்டப்பேரவைத் தேர்தலில் 80 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அஞ்சல் முறையில் வாக்களிக்கும் வாய்ப்பு தலைமைத் தேர்தல் அதிகாரி சுனில் அரோரா தகவல்.

**தெரிந்து கொள்ளுவோம்** *- K.R.K.Ravi Asir*

- ❒ வீட்டில் வளர்க்கும் புறா மணிக்கு 94.2 மைல் வேகத்தில் பறக்கும்.
- ❒ தம்மைவிட உயரம் குறைந்த விலங்குகளையே தீக்கோழிகள் தாக்கும்.
- ❒ வெற்றிலை முதலில் பயிரிடப்பட்டது மலேசியாவில்தான்.
- ❒ ஜீன்ஸ் உடைகள் தைக்கப் டெனிம் துணியை முதலில் பயன்படுத்தியது பிரான்ஸ்
- ❒ இங்கிலாந்தின் ராணியாக 9 நாட்கள் இருந்தவர் ஜேன்கிரே.
- ❒ ஆக்சிஜன் 1774ம் ஆண்டில் ஜே.பிரீஸ்ட்லி என்பவரால் கண்டறியப்பட்டது.
- ❒ குளோனிங் என்ற முறையைக் கண்டறிந்தவர் இயான் வில்மட் என்பவர்.

வழிநடத்துதலுக்கு தங்களையே சார்ந்தவர்களாக இருக்க வேண்டும், ஆதனால் சிறந்த வழிநடத்துகிறவர்களை மிக விரைவாக உருவாக்க முடியும்.

**2. கொடுப்பதற்கும் கிரியை செய்வதற்கும் ஊக்கம் அளிக்கிறது.**

நாமகரண சபைகளின் பொருளாதாரம் மற்றும் அமைப்பு திட்டங்களில் பணமானது தலைமை செயலகத்திற்கு அனுப்பப்பட வேண்டியது தேவையாயிருக்கிறது. ஆனால் சுய ஆளுகை உள்ள கிறிஸ்துவின் சபைகளில் அப்படிப்பட்ட பூமிக்குரிய தலைமைச் செயலகம் இல்லை. ஒவ்வொரு சபையும் அதனுடைய சொந்த காணிக்கை பணத்தை உள்ளூரில் கர்த்தருடைய ஊழியத்திற்கு அல்லது சபைக்காக பணம் எங்கே பயன்படுத்தப்படும் என்று தீர்மானம் செய்வதே ஒவ்வொரு சபைக்கும் உரிய பொருளாதார திட்டமாக இருக்கிறது. எந்த ஒரு மேற்பார்வை செய்யும் அதிகாரிகளோ மற்றும் தலைமை செயலக அமைப்போ ஆதரவு தெரிவிக்கப்பட வேண்டாம். இந்த திட்டம் மேன்மையான வகையில் கொடுப்பதை ஊக்கப்படுத்துகிறது. ஒரு அங்கத்தினர் தான் காணிக்கைக்காக கொடுக்கின்ற பணம் அனைத்தும் பிராந்திய சபையை கட்டுவிப்பதற்கு பயன்படும் என்று அறிந்து கொள்வாரேயாகில் அவர் இன்னும் அதிகமாக கொடுப்பதற்கு வாஞ்சையுள்ளவராக இருப்பார். அவர் தன்னுடைய சொந்த கிராமத்தில் உள்ள தேவையை தெளிவாக காணமுடியும். அவருடைய பணம் எவ்வளவு அத்தியாவசியமாக தேவைப்படுகிறது என்பதை அவர் காண்கிறார். தன்னுடைய நிதியுதவியினாலே இந்த தேவைகள் சந்திக்கப்படுவதற்கான நிறைவேறுதல் குறித்த ஒரு அறிவை அவர் உணர்கிறார். தியாகமுள்ள கொடுத்தலை உற்சாகப்படுத்த மிகச்சிறந்த வழி ஒரு பலமுள்ள தேவையை கொடுக்கிறவர்களுக்கு முன்பாக வைப்பதாக இருக்கிறது. பிராந்திய சபையிலுள்ள பொருளாதாரத்திற்காக இந்த உற்சாகத்தை கொடுக்கிறவருக்கு அளிப்பது தேவனுடைய திட்டமாக இருக்கிறது. இதே விதமாக தேவனுடைய ஏற்பாடானது சபையின் முழு பணியிலும் அதிகமான தனிப்பட்ட விருப்பத்தை உற்சாகப்படுத்துகிறது. எந்த ஒரு மிஷன் நிறுவனமும் அவருக்காக சபையின் பணியை செய்யமுடியாது என்பதை ஒவ்வொரு அங்கத்தினரும் கண்டு கொள்ள முடியும். அந்த அங்கத்தினர்தானே அதற்கு பொறுப்புடையவராக இருக்கிறார். பணியானது நடைபெறுமேயாகில் அதை அவர் செய்தாக வேண்டும். இது பொறுப்பை ஏதோ மற்றொரு குழுவின் மேல் வைப்பதற்கு பதிலாக அதை பிராந்திய சபை அங்கத்தினர்கள் மேல் வைக்கிறது. சுயாதீனமுள்ள பிராந்திய சபைகளுக்காக தேவனுடைய திட்டம் என்பது கொடுப்பதையும், பணியாற்றுவதையும் முன்னேற்றம் அடையச் செய்யும் மிகச் சிறப்பான திட்டமாக இருக்கிறது.

**3. விசுவாச வீழ்ச்சி பரவுவதை தடைசெய்கிறது.**

பல பெரிய கற்கள் ஒரு துண்டு கயிற்றினால் ஒன்று சேர்த்து கட்டப்படுமேயாகில் அவைகள் சுதந்திரமாக இல்லை, ஆனாலும் அவைகள் ஒன்றாக சேர்த்து இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்த கற்களில் ஏதாவதொன்று ஒரு நீரோடையில் விழுமேயாகில், அது எல்லா கற்களையும் அதனோடே இழுத்துக் கொள்ளும். ஆனால் கற்கள் ஒன்றாகச் சேர்த்து கட்டப்படவில்லையென்றால் ஒரு கல் விழுகிறபோது மற்ற கற்கள் விழாது. அவைகள் சுதந்திரமானவைகளாக இருக்கின்றன. இந்த ஒப்பிடுதல் சுயமான ஆளுகையுள்ள சபைகளுக்கான மற்றொரு காரணத்தை எடுத்துக் காட்டுகிறது. நாம கரண நிறுவனங்கள் சபைகளை ஒன்றாகச் சேர்த்து கட்டி அவைகளுடைய சுதந்திரத்தை எடுத்துப் போடுகின்றன. ஒரு பிராந்திய சபையானது விசுவாசத்திலிருந்து விழுந்து போகுமேயாகில், அது மற்ற சபைகளையும் தன்னுடனே சேர்த்து இழுத்துக்கொள்ளும் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரிகள் கள்ளப் போதகத்தை போதிப்பார்களேயாகில் எல்லா சபைகளும் அதை பின்பற்றும். ஏனென்றால் அவைகள் அனைத்தும் ஒன்றிணைக்கப்பட்ட வைகளாயிருக்கிறது ஏனென்றால் அது விசுவாச வீழ்ச்சி பரவுவதையும் கள்ளப்



தெளிவாயிருக்கிறது. மேலும் அவர்கள் கூடிவந்திருந்த சமயத்தில், தங்களுடைய வருமானத்திலிருந்து கொடுப்பதற்கு அது ஒரு சிறந்த நாளாகவும் இருந்திருக்கும். அதே செயல் தான் இன்றும் நடக்கிறது.

இவையெல்லாவற்றையும் சுருக்கமாகச் சொல்ல, வாரத்தின் முதல் நாள் ஒரு பரிசுத்த நாளல்ல, ஓய்வுநாளை அநுசரிக்கப்பட்டது போல அது ஒரு ஓய்வுநாளல்ல, நிச்சயமாக இது ஓய்வுநாளல்ல, ஆனால் இது கர்த்தருடைய உயிர்த்தெழுதலினால் மகிமைப்படுத்தப்பட்ட நாள் மேலும் பரிசுத்த ஆவியின் வருகைக்கென்றும், முதல் முறையாக உண்மையிலே சுவிசேஷம் போதிக்கப்படுவதற்கென்றும் மேலும் சபை ஸ்தாபிக்கப்படுவதற்கென்றும் தெரிந்தெடுக்கப்பட்ட நாள் இது. இது மாத்திரமல்ல, இந்த நாள் கர்த்தர் தம்முடைய ஜனங்கள் கூடி ஆராதிக்கும்படி தெரிந்தெடுத்த நாளாயிருந்தது. இப்படியிருக்கிறபடியினால் இது ஆராதனைக்குரிய வேதாகம நாள். நாம் புதியஏற்பாட்டில் வைக்கப்பட்டுள்ள திருஷ்டாந்தங்களைப் பின்பற்றவும், தேவனை ஆராதிக்கும் நோக்கத்திற்காக வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவரும்படிக்கும் தவறிவிடமாட்டோம். தவறு அந்தநாளில் கூடிவருவதை புறக்கணிக்கச் செய்யும். எபிரெய எழுத்தர் சபை கூடிவருதலை விட்டு விலகக்கூடாதென்று நம்மை உற்சாகப்படுத்துகிறார் (எபி.10:25). இது கிறிஸ்தவர்களாயிருக்கிற நமக்கு வாரத்தின் முதல் நாளிலே கூடிவரும் சந்தர்ப்பத்தோடே மகிமைப்படுத்தவும் அந்த நாளில் ஆராதிப்பதின் மூலம் நமது கர்த்தரை துதிக்கவும் அவர் நமக்கு ஏற்படுத்தியிருக்கிற இந்த நோக்கம் எவ்வளவு அற்புதமானது!

நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? தேவனை ஆராதிக்கும் நோக்கத்திற்காக மற்ற கிறிஸ்தவர்களோடு வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவருகிறீர்களா? இல்லையென்றால், நீங்கள் தேவனுடைய வார்த்தையை தொடர்ந்து வாசிக்கவும், கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கவும், உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, உங்கள் பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவும் நாங்கள் ஜெபிக்கிறோம். இதை நீங்கள் செய்வீர்களென்றால், கர்த்தர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் உங்களைச் சேர்த்துக்கொள்வார். அப்போஸ்தலர் 2 ஐ வாசித்துப்பாருங்கள் அவர்கள் அதைச் செய்யதார்களென்றால். நீங்கள் அதைச் செய்யவேண்டுமென நாங்கள் ஜெபிக்கிறோம்.

**வாசகர் கடிதம்...**

இயேசுவின் இனிய நாமத்தில் ஆசிரியர் அவர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். கொரோனா பாதிப்பினால் அநேக ஊழிய இதழ்கள் நிறுத்தப்பட்ட நிலையில் தங்களுடைய இதழை தேவன் ஆசீர்வதித்தார். மகிமையுள்ள தேவனுக்கு நன்றி. இப்பொழுது 2 பாடல்கள் அனுப்பி உள்ளேன். இதழில் இடம் இருக்கும்போது வெளியிடுங்கள். தங்களை நேரில் சந்திக்கும்போது சந்தா கொடுக்கிறேன். திருச்சி கூட்டம் நடக்க தேவன் கிருபை செய்வாராக!

*இயேசுவின் இனிய பணியில் அடியேன் என்றும்,*
K.S.மாணிக்கவாசகம்

**வேதாகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**

**ஆம் எனில் ☑ குறியிடவும்**

**தற்சோதனை பகுதி - 30**



**30. நாம் யாராலே வஞ்சிக்கப்படுகிறோம்?**


1. சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமில்லாதிருந்தது
   ☐ வசன ஆதாரம் --------------------------------------------------
2. சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது
   ☐ வசன ஆதாரம் --------------------------------------------------
3. ஒருவன் தான் ஒன்றுமில்லாதிருந்தும், தன்னை ஒரு பொருட்டென்று எண்ணினால் வஞ்சிக்கப்படான் ☐ வசன ஆதாரம்---------
4. ஒருவனும் தன்னைத்தானே வஞ்சியாதிருப்பானாக ☐ வசன ஆதாரம் -
5. முதல் மனிதன் வஞ்சிக்கப்பட்டான் ☐ வசன ஆதாரம் ---------
6. ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்
   ☐ வசன ஆதாரம் --------------------------------------------------
7. சாத்தானுடைய செயல் கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகல வஞ்சகத்தோடு இருக்காது ☐ வசன ஆதாரம்----------
8. சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவருக்கும் கொடிய வஞ்சகத்தை தேவன் அவர்களுக்கு அனுப்புவார் ☐ வசன ஆதாரம்-
9. ஒருவனும் நயவசனிப்பினாலே உங்களை வஞ்சிக்க முடியாது
   ☐ வசன ஆதாரம் --------------------------------------------------
10. ஒருவனும் நயவசனிப்பினாலே உங்களை வஞ்சியாதபடிக்கு என பவுல் எழுதியிருக்கிறார் ☐ வசன ஆதாரம் -----------------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள்.**
**மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள். இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**


**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**
*Contact Us: 94435 58041*

‘ஒரே வழி’ வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**




## வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு

- Jim Massey

*– மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்*

**பாடம் -11**

**பிராந்திய சபைகள் சுயாதீனமுள்ளவர்களாய் இருக்கவேண்டுமென்று தேவன் ஏன் விரும்புகிறார்**

**வரை குறிப்பு**

**1. வழிநடத்துகிறவர்களையும் அங்கத்தினர்களையும் உருவாக்குகிறது.**
**2. கொடுப்பதற்கும் கிரியை செய்வதற்கும் ஊக்கம் அளிக்கிறது.**
**3. விசுவாச வீழ்ச்சி பரவுவதை தடைசெய்கிறது.**

**கலந்துரையாடல்**

**1. வழிநடத்துகிறவர்களையும் அங்கத்தினர்களையும் உருவாக்குகிறது**

தேவன் ஏன் சுயமாக ஆண்டுகொள்ளுகிற சபைகளை வாஞ்சிக்கிறார் என்பதை நாம் உணர்ந்துகொள்ளவில்லையாயினும், நாம் இன்னும் வேதாகம அதிகாரத்திற்குக் கீழ்ப்படிய வேண்டியதாயிருக்கிறது. ஆனால் சுயாதீனமுள்ள பிராந்திய சபைகள் சபைகளுக்கு மிகச் சிறப்பானதாயிருக்கிறது என்பதற்கான தேவனுடைய திட்டம் ஏன் என்பதற்காக பல நல்ல காரணங்களை நாம் காணமுடியும். ஒரு காரணம் என்னவென்றால் ஒவ்வொரு சபையிலும் இது வழி நடத்துகிறவர்களையும் அங்கத்தினர்களையும் உருவாக்குகிறது. எப்பொழுதெல்லாம் ஒரு பிராந்திய சபைக்காக வழிநடத்துகிறவர்கள் வெளியேயிருந்து கொண்டுவரப்படுகிறார்களோ அப்பொழுதெல்லாம் அந்த சபையிலே வழி நடத்துகிறவர்கள் தங்களை வளர்த்துக் கொள்ளமாட்டார்கள். எப்பொழுதெல்லாம் ஒரு பிராந்திய சபையின் பணி அற்காக வெளியேயுள்ள ஏ?தோ ஒரு குழுவினால் செய்யப்படுமேயாகில் அந்த சபையானது தன்னை விரைவாக வளர்த்துக் கொள்கிறது இல்லை. கிறிஸ்தவமானது ஒரு நபருடைய சிறப்பான திறமைகளை நிச்சயம் வெளிக்கொண்டுவரவேண்டும். ஒவ்வொரு பிராந்திய சபையின் அங்கத்தினர்களையும் பூரணமான அளவில் வளர்ச்சியடையும்படி தேவன் சபையின் அமைப்பை வடிவமைத்திருக்கிறார்.

ஒரு உள்ளூர் சபையிலுள்ள மனுஷர்கள், தங்களுடைய தலைவர்கள் அவர்களிடத்தில் அனுப்பப்படுவார்கள் என்றும் தங்களுக்காக தலைவர்கள் முடிவெடுப்பார்கள் என்றும் உணருவார்களேயாகில் அவர்கள் தங்களுடைய சொந்த பங்கை செயல்படுத்தும்படி கடினமாக முயற்சி செய்கிறதில்லை. நாமகரண சபையின் வடி வமைப்பானது பிராந்திய சபை வளர்ச்சியை பலவீனப்படுத்துகிறது ரோமர் 15:14-ல் அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியிலிருந்த சகோதரர்களை நற்குணத்தினால் நிறைந்தவர்களும், அறிவினால் நிரப்பப்பட்டவர்களும், ஒருவருக்கொருவர் புத்திசொல்ல வல்லவர்களுமாயிருப்பதற்காக புகழ்ந்தார். இந்த மனுஷர்கள் ஒரு சுயாதீனமான சபையிலே தங்களை அபிவிருத்தி செய்திருந்தார்கள் ஆனால் எபி.5:12-14 வசனங்களில் அங்கத்தினர்கள் தங்களை அபிவிருத்தி செய்து கொள்ளாததினாலே கடிந்து கொள்ளப்படுகிறார்கள். இந்த அங்கத்தினர்கள், அந்த சபையிலே நீண்ட காலம் இருந்தார்கள், ஆனால் அவர்கள் இன்னும் போதிக்க இயலாதவர்களாயிருந்தார்கள். அவர்களுக்கு போதிப்பதிலே பயிற்சி அல்லது அனுபவம் தேவையாயிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. நாம் போதனையின் மூலமாக போதிக்க கற்றுக்கொள்கிறோம். சபையிலே வழிநடத்துதலுக்கு அனுபவம் தேவையாயிருக்கிறது. பிராந்திய சபைகள்